முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 27 ம் திகதி முதல்

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 04 ம் திகதி வரை

(13.11.2022 ஞாயிறு முதல் 20.11.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. முக்கண் புதல்வனே முருகனே
   மூலக்கனல் தூண்டி ஞானமருளும்
   சிக்கல் சிங்கார வேலனே
   சித்தி அருள கலியில் அவதாரம்
2. அவதாரம் அரங்கமகா ஞானியாக
   ஆற்றல்பட நிகழ்த்தி இருக்க
   அவதார ஞான தேசிகனும் கேட்க
   அகத்தியமகரிஷியும் இந்தியா தமிழக எதிர்கால
3. எதிர்கால பலன் குறித்த ஆசிதனை
   இயம்புவேன் சுபகிருது துலை திங்கள் இருபானேழ்திகதி மேல்
   ஆதரவாய் தேள்திங்கள் சதுர்திகதி வரை
   அறிவிப்பேன் நிகழ்வாக உரைப்பேன்
4. உரைக்கவே இந்தவித காலம்
   உபரியாக மழை வெள்ளம் பெருகி
   கரைபுரளும் தேசம் எங்கிலும்
   கணமழையாக சேதமும் மிஞ்சும்
5. மிஞ்சுமே மகசூலில் இடராக
   முன்னேற்றம் சில தடைபடும்
   அஞ்சுவர் கழனி மக்களும்
   அழிவும் அனுகி ஆளுமைக்கு
6. ஆளுமைக்கு அமைதியிலா நிலை
   அவலம் மக்களுக்கு தருகின்ற
   இலவசம் கருணை நிதியிலும் கூட
   இடரென ஊழல் அனுகி நிற்கும்
7. நிற்குமே மக்களை காக்கும்
   நீதியும் காவலும் கூட
   ஏற்புகொள்ளா வண்ணம் விலையாகி
   ஏமாற்றம் மக்களுக்குத் தரக் கூடும்
8. கூடாத குற்றவியல் செயல்கள்
   கொலை பாதகங்களும் கூட
   கூடுமே மக்கள் அஞ்சும்படி
   குறிப்பாக வாலிபர்கள் போதை வழி

9. போதை வழி பொல்லாங்காகி
புலக்கம் மிகுந்து இடர்பெருகும்
பூதலத்தில் இந்த அவலம் வெல்ல
புண்ணிய வழியை ஞான வழியை

10. வழியை அரசே முன் மொழிந்து
வழிகாட்டி சக்திகள் கூட்டி
வழிநடத்தினால் தான் இந்தியா தமிழகம்
வளர்ச்சியும் வல்லமையும் கண்டு தலைநிமிரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 27 ம் நாள் 13.11.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகை மாதம் 04 ம் நாள் 20.11.2022 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் குறித்த வார ஆசி நூலின் சாரம் :

முக்கண்ணுடைய சிவ பெருமானின் புதல்வனே முருகப்பெருமானே ஞானிகளின் மூலக் கணலை தூண்டி அவர்களுக்கு ஞானம் அருளி ஞானிகளாக்கி காக்கும் சிக்கல் சிங்கார வேலனே மக்களுக்கும் ஞானம் உண்டாக்கி அவர்கள் எல்லாம் கலியுகத் துன்பத்தில் இருந்து மீள வழிவகுத்து காக்கவே முருகப்பெருமானின் அம்சமாக இந்த கலியுகத்தினில் ஆறுமுக அரங்க மகா தேசிகராக எல்லையில்லா ஆற்றலுடன் அவதாரம் புரிந்து இருக்க, அவதார ஞானி ஆறுமுக அரங்க மகான் தாம் அகத்திய மகரிஷி எம்மிடம் எதிர்காலம் குறித்து கேட்கவே அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தின் எதிர்கால பலனாக சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 27ம் நாள் 13.11.2022 ஞாயிற்றுகிழமை முதல் கார்த்திகை மாதம் 04ம் நாள் 20.11.2022 ஞாயிற்று கிழமை வரை உள்ள பலன்களை கூறுகிறேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தற்காலம் தேசம் எங்கும் மழைபொழிவு அதிகமாகி கரைபுரளும் வெள்ளப்பெருக்கு உண்டாகி சேதங்கள் உண்டாகும். ஆதலால் வெள்ளப் பெருக்கு பாதிப்பால் நாட்டின் முன்னேற்றம் சிறிது தடைபடும் விவசாயிகள் மழை வெள்ளத்தால் அச்சம் அடைவார்கள். விவசாய நிலங்களில் வெள்ளம் சூழ்ந்து நஷ்டம் அழிவு உண்டாகும் ஆதலால் ஆட்சிக்கு அமைதி இல்லாத நிலை உண்டாகும்.

இப்படிப்பட்ட இடரான சூழலில் மக்களுக்கு அரசு கருணையுடன் அளிக்கும் கருணை நிதி, இலவச பொருள்களிலும் கூட சிலர் ஊழல் செய்வார்கள். இதை கட்டுப்படும் நீதித்துறையும் காக்க வேண்டிய காவல் துறையும் ஒன்றும் செய்ய இயலாமல் தவிக்கும். மக்களால் சமாளிக்க முடியாத வகையிலே விலைவாசி ஏற்றங்கள் உண்டாகும்.

நாட்டினில் குற்றங்கள் பெருகும், கொலைபாதக செயல்கள் பெருகும் வாலிப வயது உடையவர்களிடம் போதை பழக்கம் அதிகமாகும் அவர்களால் துன்பம் அதிகமாகும் இப்படிப்பட்ட அவல நிலைகள் நாட்டினில் அதிகமாகாதவாறு காக்க வேண்டுமாயின் மக்களை காக்கவேண்டுமாயின் மக்களுக்கு புண்ணியத்தின் பாதையை, தர்ம நெறியை ஞான வழியை அரசே முன் மொழிந்து மக்களை நல்வழி படுத்தி வழிகாட்டி நின்றால் தான் மக்கள் தர்மவழி நடந்தால் தான் இந்தியா தமிழகம் வளர்ச்சி அடையும் வல்லமை பெறும் உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்குமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–